பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

14 09 2026 திங்கட்கிழமை 6 45 AM

<u>வணக்கம் - மாநில செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரிக்ஸ் உச்சிமாநாடு பல்வேறு உறுதியான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

2. பிஜேபி சார்பில், வரும் 17-ம் தேதி முதல் ஒரு மாதம் நாடு முழுவதும் சேவை உறுதியேற்பு இயக்கம் நடத்தப்படும் என்று அக்கட்சியின் மூத்த தலைவர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

3. மாநிலத்தில் 401 நேரடி நெல் கொள்முதல் நிலையம் மூலம் விவசாயிகளிடமிருந்து 42 ஆயிரத்து 82 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

4. தொடர் விடுமுறையை முன்னிட்டு தமிழகத்தின் பல்வேறு ஊர்களுக்கு சென்றுள்ள பொதுமக்கள் சென்னை திரும்ப ஏதுவாக 3,565 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என்று மாநில அரசு அறிவித்துள்ளது.

5. ஆப்கானிஸ்தானுக்கு எதிரான முதலாவது டுவென்டி டுவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

---------------

புதுதில்லியில் நிறைவடைந்த பிரிக்ஸ் உச்சிமாநாடு பல்வேறு உறுதியான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய, வெளியுறவு அமைச்சகத்தின் பொருளாதார உறவுகளுக்கான செயலாளர் திரு. சுதாகர் டலேலா பல்வேறு துறைகளில் 50-க்கும் மேற்பட்ட முக்கியமான முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இது இந்தியாவின் தலைமை பொறுப்புக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றி என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐ.நா.சபையில், சீர்த்திருத்தம் மேற்கொள்ள வேண்டும் என்ற இந்தியாவின் நிலைப்பாட்டை பிரிக்ஸ் நாடுகள் தொடர்ந்து வலியுறுத்தி வருவதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

பிரிக்ஸ் உறுப்பு நாடுகளுடன் இந்தியா தன் உறவுகளை மேலும் வலுப்படுத்த விரும்புகிறது என்றும் அவர் கூறினார்.

---------------

பிஜேபி சார்பில், வரும் 17-ம் தேதி முதல் ஒரு மாதம் நாடு முழுவதும் சேவை உறுதி ஏற்பு இயக்கம் நடத்தப்படும் என்று அக்கட்சியின் மூத்த தலைவர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

மும்பையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், 2047-ம் ஆண்டுக்குள் வளர்ச்சி அடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டுவதை நோக்கமாக கொண்டு, இதுபோன்ற இயக்கங்கள் நடத்தப்படுவதாக கூறினார்.

பொது மக்களின் பங்கேற்புடன் இந்த இயக்கம் நடத்தப்படும் என்றும், அவர் தெரிவித்தார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, முதலமைச்சராகவும், பிரதமராகவும் 25 ஆண்டுகாலம் பொது சேவையை வரும் 17-ம் தேதி நிறைவு செய்ய உள்ளதாகவும் அவர் கூறினார்.

திரு. நரேந்திர மோடி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு, உள்கட்டமைப்பை மேம்படுத்தவும், சமூக கலாச்சார துறைகளில், பல்வேறு முன் முயற்சிகளை மேற்கொண்டதாகவும் திரு. அமித் ஷா தெரிவித்தார்.

---------------

மாநிலத்தில் 401 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் விவசாயிகளிடமிருந்து 42 ஆயிரத்து 82 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

விவசாயிகளிமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட நெல்லுக்கு சமீபத்தில் அறிவிக்கப்பட்ட ஊக்கத்தொகையும் சேர்த்து வழங்கப்பட்டதாகவும் அரசு கூறியுள்ளது.

நெல் வரத்தின் அடிப்படையில், தேவைக்கேற்ப மாவட்ட ஆட்சியரின் அனுமதி பெற்று, நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறந்திட நுகர்பொருள் வாணிப கழக மண்டல மேலாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---------------

சென்னை பட்டினப்பாக்கத்தில் மீனவர்கள் குடியிருப்புகள் அருகே புதிய தலைமை செயலகம் அமைக்கும் முடிவை தவெக அரசு கைவிட வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கேட்டுக்கொண்டுள்ளது.

கோவையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் மாநில செயலாளர் திரு. சண்முகம் மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதிக்காத வகையில் மாற்று இடத்தில் தலைமை செயலக கட்டடம் கட்டப்பட வேண்டும் என்று கூறினார்.

கடந்த 100 நாட்களில் ஒரு லட்சம் கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்த்துள்ளதாக தமிழக அரசு கூறியுள்ள நிலையில், அதனால் எத்தனை பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கப்போகிறது என்ற விவரத்தை வெளிப்படையாக தெரிவிக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

---------------

தூத்துக்குடி மாவட்டம் முள்ளக்காடு பகுதியில், உப்பளங்களை கையகப்படுத்தி, கப்பல் கட்டும் நிறுவனம் தொடங்குவதை தமிழக அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று விடுதலை சிறுத்தைகள் கட்சி கேட்டுக்கொண்டுள்ளது.

திருச்செந்தூரில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் தலைவர் திரு. தொல்திருமாவளவன் இத்திட்டத்தால், 50 ஆயிரம் உப்பளத் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று கூறினார்.

மதுராந்தகம், தாராபுரம் சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலில் இடதுசாரி கட்சிகள் தனித்து போட்டியிடுவது அவர்களுக்குரிய உரிமை என்றும் அவர் குறிப்பிட்டார்.

---------------

விநாயகர் சதுர்த்தி இன்று வழக்கமான உற்சாகத்துடனும் பக்தி பெருக்குடனும் கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி விநாயகர் கோவில்களில் இன்று காலை முதல் சிறப்பு பூஜைகள் நடைபெற்று வருகின்றன.

திருச்சி மலைக்கோட்டை, சிவகங்கை மாவட்டம் பிள்ளையார் பட்டி, கோவை மாவட்டம் ஈச்சனாரி உள்பட மாநிலத்தின் பல்வேறு இடங்களில் உள்ள விநாயகர் கோயில்களில் இன்று காலை முதல் ஏராளமான பக்தர்கள் வரிசையில் நின்று விநாயகர் பெருமானை வழிப்பட்டு வருகின்றனர்.

---------------

விநாயகர் சதுர்த்தி மற்றும் தொடர் விடுமுறையை முன்னிட்டு தமிழகத்தின் பல்வேறு ஊர்களுக்கு சென்றுள்ள பொதுமக்கள் சென்னை திரும்ப ஏதுவாக சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என்று மாநில அரசு அறிவித்துள்ளது.

இன்று திருச்சி, மதுரை, திண்டுக்கல், சேலம், திருநெல்வேலி உள்ளிட்ட பல்வேறு நகரங்களிலிருந்து இரண்டாயிரத்து 240 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதை தவிர, இதர ஊர்களிலிருந்து 420 சிறப்பு பேருந்துகள் என மொத்தம் 3 ஆயிரத்து 565 சிறப்பு பேருந்துகள் கிளாம்பாக்கம் பேருந்து முனையத்திற்கு இயக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாதவரம் பேருந்து முனையத்திற்கு 160 சிறப்பு பேருந்துகளும், கிழக்கு கடற்கரை சாலை வழியாக கோயம்பேடு பேருந்து நிலையத்திற்கு 370 சிறப்பு பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் பட்சத்தில் அந்தந்த பேருந்து நிலையங்களிலிருந்து உடனுக்குடன் கூடுதல் பேருந்துகளை

இயக்க போக்குவரத்து கழகங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் மாநில அரசு கூறியுள்ளது.

ரயில் மூலம் சென்னை திரும்பும் பயணிகள் வசதிக்காக சென்னை சென்ட்ரல், எழும்பூர், தாம்பரம் ரயில் நிலையங்களிலிருந்து சென்னை மற்றும் புறநகரின் பல்வேறு பகுதிகளுக்கு கூடுதலாக மாநகர பேருந்துகள் இயக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் மாநில அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---------------

மேற்காசியா மோதலுக்கு தீர்வுக்காண வளைகுடா நாடுகளுக்கும் ஈரானுக்கும் இடையே நடைபெற இருந்த கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

------------

போலந்து எல்லை அருகே யுக்ரைன் பயணிகள் ரயில் மீது ரஷ்யா ட்ரோன் தாக்குதல் நடத்தியது.

------------

தலைநகர் தில்லியில், வாகனங்களால் ஏற்படும் மாசு அதிகரித்துள்ளதால் கண்காணிப்பை தீவிரப்படுத்த தில்லி அரசு முடிவு செய்துள்ளது.

------------

மேற்கவங்க மாநிலத்தில் அனுமதியின்றி செயல்பட்ட 252 மதராசக்கலை மூடுவதற்கு அம்மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

---------

மணிப்பூரில் நேற்று அடையாளம் தெரியாத தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதில் 2 பெண்கள் உட்பட 4 பேர் உயிரிழந்தனர்.

----------

காவிரி நதியில் தொழிற்சாலைகளின் ஒகேனக்கலின் கழிவுநீர் கலப்பதை தடுக்க கர்நாடகா அரசு நடவடிக்கை எடுக்கும் என்று அம்மாநில வனத்துறை அமைச்சர் ராமலிங்க ரெட்டி கூறியுள்ளார்.

------------

செங்கல்பட்டு மாவட்டம் பெருங்கரணை கிராமத்தில், நடுபழனி பாலமுருகன் தண்டாயுதபாணி திருக்கோயிலில் திருடப்பட்ட மரகத சிலை மீட்கப்பட்டுள்ளதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

---------

ஆம்னி பேருந்துகளில் கூடுதல் கட்டணம் வசூலித்தாக, 639 பேருந்துகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு 30 லட்ச ரூபாய் அபராதம் வசூலிக்கப்பட்டதாக போக்குவரத்து கழகம் தெரிவித்துள்ளது.

-----------

இடைத்தேர்தல் நடைபெற உள்ள 2 தொகுதிகளில், சோதனை என்ற பெயரில் வணிகர்களுக்கு இடையூறு செய்யக்கூடாது என்று வணிக அமைப்புகள் தேர்தல் ஆணையத்தை கேட்டுக்கொண்டுள்ளன.

-----------

லோக் அதாலத் நீதிமன்றங்கள் மூலம் சென்னை பெருநகர காவல்துறையில் 2 ஆயிரத்து 715 வழக்குகள் முடித்து வைக்கப்பட்டுள்ளதாக மாநகர காவல் ஆணையர் திரு.அமல்ராஜ் தெரிவித்துள்ளார்.

---------------

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான முதலாவது டுவென்டி டுவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

தில்லியில் நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில், முதலில் விளையாடிய ஆப்கானிஸ்தான் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 8 விக்கெட் இழப்பிற்கு 156 ரன் எடுத்தது.

157 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இந்தியா 13 புள்ளி 4 ஓவரில் 3 விக்கெட் இழப்பிற்கு 157 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

அபிஷேக் ஷர்மா அற்புதமாக விளையாடி 32 பந்துகளில் 82 ரன் குவித்தார்.

----------

ஆசியக் கோப்பை மகளிர் டுவென்டி டுவென்டி கிரிக்கெட் போட்டியில், இந்தியா 72 ரன் வித்தியாசத்தில் இலங்கையை வென்று கோப்பையை கைப்பற்றியது.

துபாயில் நேற்று நடைபெற்ற இறுதிப்போட்டியில், முதலில் விளையாடிய இந்தியா 20 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 183 ரன்

எடுத்தது. 184 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய இலங்கை 20 ஓவரில் 111 ரன்னுக்கு ஆட்டம் இழந்தது.

ஸ்ரீ சாரணி 4 விக்கெட்டுக்களையும், தீப்தி ஷர்மா 3 விக்கெட்டுக்களையும், ஷஃபாலி வர்மா, பிரேமா ராவத், கிராந்தி கௌட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

>>>>>>END<<<<<<